


https://puthusudar.lk/

puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

20th AUGUST 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 41




## மூன்றாக உடைகிறது மொட்டு:

# ஜனாதிபதி தேர்தலுக்காக இப்போதிருந்தே களத்தில்...

அடுத்த வருடம் இடம்பெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாக வைத்து அரசியல் கட்சிகள் இப்போதே களமிறங்கியுள்ளன.தேர்தல் காலங்களில் போலவே நாடு பூராகவும் கூட்டங்களை நடத்தி வருகின்றன.

02






## எம்பிக்கள் மாகாண சபைகளுக்கு

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் வேலைத்திட்டங்களில் எம்பிக்களை ஈடுபடுத்துவதற்கு ஜனாதிபதி ரணில்

02

### அதிகாரப் பகிர்வு:

## கட்சிகளிடையே இணக்கப்பாடு இல்லை

13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி அதிகாரப் பகிர்வை வழங்கும் ஜனாதிபதியின் யோசனைக்கு கட்சிகள் இணக்கப்பாட்டினை வெளியிடவில்லை என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 20 கட்சிகள் அவர்களவது யோசனைகளை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளன.அந்த யோசனைகளின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இணக்கப்பாடு

02









புதுசுடர்
www.puthusudar.lk
2023 AUGUST 20 - SUNDAY

# பிசுபிசுத்துப் போகும் 13

அரசியல் அரங்கில் இப்போது அதிகம் பேசப்படுவது 13ஆவது திருத்தச் சட்டம்பற்றித்தான். பொருளாதாரப் பிரச்சினைகளை விடவும் இந்த 13தான் இப்போது ஹொட் டொபிக்காக உள்ளது.

அரசியல்வாதிகள் எல்லோரும் இதன் பின்னால்தான் இப்போது ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். தமக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்பதுபோல் சில தமிழ் அரசியல்வாதிகள் பேசுவதையும்–அவ்வாறு கிடைக்குமானால் அதை எதிர்ப்போம் என்று சிங்கள அரசியல்வாதிகள் பேசுவதையும் – இது எல்லாமே ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்காகவும் இந்தியாவை ஏமாற்றுவதற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடத்தும் நாடகம் என்று வேறு சில தமிழ் அரசியல்வாதிகள் கூறுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இன்னொரு தரப்பு என்னதான் நடக்கப்போகிறது என்று ஆர்வத்தோடு உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு இருக்கிறது

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்று குறுகிய காலத்திற்குள்ளேயே இந்த அரசியல் தீர்வு பேச்சு தொடங்கிவிட்டது.அதைத் தொடக்கி வைத்தவர் ரணில்தான்.

பொருளாதாரப் பிரச்சினையை மாத்திரம் பேசுகின்ற–பேச வேண்டிய தருணத்தில்தான் அரசியல் தீர்வுபற்றிய பேச்சை தொடக்கி வைத்தார் ரணில்.உண்மையில் இதை யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு எல்லாம் இருந்தது புதிதாக ஜனாதிபதி பதவியை ஏற்றிருக்கும் ரணில் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்பதுபற்றித்தான்.

ஆனால்,ரணிலோ திடீரென அரசியல் தீர்வு விவகாரத்தை இழுத்துவிட்டார்.ஏதோ இது தமக்குக் கிடைத்திருக்கும் அதிஷ்டம்போல் நினைத்துக்கொண்டு சில தமிழ் அரசியல்வாதிகள் இதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர்.

மறுபுறம், இந்தியாவும் கண் வைக்கத் தொடங்கியது.இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்காகச் சென்ற ஜனாதிபதி விக்ரமசிங்கவிடம் மோடி நிபந்தனையாக முன்வைத்ததே 13 ஐ அமுல்படுத்த வேண்டும் என்பதுபற்றித்தான்.

மோடியுடனான சந்திப்பை முடித்துவிட்டுத் திரும்பிய ரணில் வந்த வேகத்திலேயே சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்.13ஐ அமுல்படுத்துவதுபற்றி–அரசியல் தீர்வை வழங்குவதுபற்றி பேசினார்.

இந்த விடயத்தில் எல்லோரும் அதிசயமாகக் கேற்கும் கேள்வி என்னவென்றால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ரணில் இவ்வளவு தீவிர அக்கறை காட்டுவது ஏன் என்றுதான்.

உண்மையில் ஆச்சரியமான விடயம்தான்.ஆனால்,அதற்கான பதிலை சில தமிழ் அரசியல் தலைவர்களே கூறத் தொடங்கியுள்ளனர்.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது.சிங்கள மக்களிடம் செல்வாக்கை இழந்துள்ள ரணில் தமிழ் மக்களிடம் இருந்து வாக்குகளை அபகரிப்பதற்காகத்தான் இப்படியொரு நாடகத்தை அரங்கேற்றுகிறார் என்று அவர்கள் கூறத் தொடங்கியுள்ளனர்.

இந்தத் தகவல் எல்லா தமிழ் மக்களிடமும் சென்றடைந்துவிட்டது. ரணில் என்பவர் ஒரு நரி என எல்லோரும் பொதுவாக விளங்கி வைத்துள்ளதால் இது ரணிலின் நாடகம்தான் என எல்லோரும் இப்போது நம்பத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக,வடக்கு–கிழக்கு தமிழ் மக்கள்.

இதனால் ரணிலின் அதிகாரப் பகிர்வு முயற்சி பிசுபிசுத்துப் போவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதிகாரப் பகிர்வை நோக்கிய அந்தக் குழு,இந்தக் குழு என எந்தக் குழு வை அமைத்தாலும் எல்லாமே நாடகம்தான் என மக்கள் கூறத் தொடங்கியுள்ளனர்.

ஆகவே,ஜனாதிபதி இதில் இருந்து எப்படி மக்களை திசை திருப்பப் போகிறார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# திருகோணமலையை இந்தியாவுக்கு விற்கப்போகும் ஜனாதிபதி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு அதாவது,அதானி நிறுவனத்துக்கு திருகோணமலையை விற்பதற்குத் திட்டமிட்டுள்ளார் என்று ஜேவிபியின் முன்னாள் எம்பி சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கிற்கு அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு சக்திகளின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் முக்கிய இடங்களை எல்லாம் வெளிநாடுகளுக்கு விற்கும் வேலையில் ரணில் இப்போது ஈடுபட்டுள்ளார் என்று அவர் மேலும் சொன்னார்.

## எம்பிக்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

இந்த சபைகளுக்கான தேர்தல் இந்த வருடம் எப்படியும் இடம்பெறப்போவதில்லை. இதனால் இச்சபைகளின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும் சேவையை அதிகரிப்பதற்காகவே மேற்படி தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளார் என்று அறிய முடிகிறது.

இது தொடர்பில் மாகாண ஆளுநர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் விசேட ஆணையாளர்களுடன் பேசி ஒரு மாதத்துக்குள் இந்த கட்டமைப்பு உருவாக்கப்படும் என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

## அதிகாரப்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காணப்படப்படவில்லை என்று தெரிய வருகிறது.

மொட்டுக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்திடம் இது தொடர்பில் கேட்டபோது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய இந்த சந்தர்ப்பத்தில் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுவது பொருத்தமற்றது என்று கூறியுள்ளார்.

மேலும், வடக்கு–கிழக்கை இணைப்பதற்கும் காணி–பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கும் தாம் அனுமதிக்கமாட்டோம் என்று கூறினார்.




## மூன்றாக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதிலும் மொட்டு கட்சி கடும் தீவிரமாக உள்ளது. இந்தக் கட்சியால் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பொருளாதார பிரச்சினையை மறக்கச் செய்து இப்போதிருந்தே மக்களை தம் வலைக்குள் வீழ்த்துவதற்கான நடவடிக்கையை அக்கட்சி ஏற்படுத்தி வருகிறது.

ஆனால்,அக்கட்சி மூன்றாக உடைந்து களமிறங்கி இருப்பதுதான் சிக்கலான விடயம்.ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக ஒரு தரப்பும்–பசில் ராஜபக்சவுக்கு ஆதரவாக இன்னொரு தரப்பும்–நாமல் ராஜபக்சவுக்கு சார்பாக மற்றொரு தரப்பும் என அவர்கள் மூன்றாகப் பிரிந்து நிற்கின்றனர்.

மொட்டு கட்சியைச் சேர்ந்த நிமால் லான்சா இப்போது ரணிலின் பக்கம் நிற்கிறார்.அவரை வெல்ல வைப்பதற்காக மொட்டுக்குள் இருந்தும் ஏனைய கட்சிகளுக்குள் இருந்தும் பலரை வளைத்துப் போட்டு கூட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மறுபுறம்,நாமல் தரப்பு கிராமம் கிராமமாகச் சென்று கூட்டங்களை நடத்தி வருகிறது.அடுத்த தலைவருக்குப் பொருத்தமானவர் நாமல்தான் என்று கூறி வருகின்றனர்.

அடுத்து பசி லும் கூட்டங்களை நடத்தி நடத்தி அவர் ஜனாதிபதி வேட்பாளராவதற்கான காய் நகர்த்தல்களைச் செய்து வருகிறார்.



# மாணவர்களை நிரந்தர நோயாளர்களாக மாற்றும் பாடசாலை உணவகங்கள்

எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com



கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக நாட்டில் நிலவிய அசாதாரன சூழ்நிலையின் பின்னர் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டன.இதன்போது பாடசாலை உணவகங்கள் மீளத் திறக்கப்படும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு பல அறிவுறுத்தல்களை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்தது.குறிப்பாக பாடசாலை உணவக நடைமுறைகள் அனைத்தும் ஏற்கனவே வெளியிடப்பட்டிந்த 2015/35 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கிணங்க அமுல் படுத்தப் பட வேண்டுமெனவும், கேள்வி மனுக்கோரல் மற்றும் விலை மனுக்கோரல்கள் இன்றி பாடசாலை உணவகங்கள் நடத்தப்படக்கூடாது எனவும் மேற்படி சுற்றறிக்கையின் ஊடாக பாடசாலை அதிபர்களை பணித்திருந்தது.

கல்வி அமைச்சின் மேற்படி அறிவுறுத்தல்களை கவனத்திற்கொள்ளாமல் நாட்டிலுள்ள பெரும்பாளான பாடசாலை உணவகங்கள் மீளத் திறக்கப்பட்டதுடன்,உணவக சுற்றறிக்கையை மீறும் வகையில் சில சட்டவிரோதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.பாடசாலை நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய அதிபர் மற்றும் படசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உட்பட பாடசாலை உணவக மேற்பார்வை குழு உறுப்பினர்கள் பலரும் இந்த விடயத்தில் போதிய அவதானத்தை செலுத்தத் தவறியுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்ட பாடசாலை அதிபர்களில் பலர் கேள்வி மனுக்கோரல்கள் எதுவுமின்றி மிகப் பொறுப்பற்ற முறையில் பாடசாலை உணவகங்களை தமக்கு அவசியமான நபர்கள் ஊடாக நடத்திச் சென்றுள்ளதுடன்,தொடர்ச்சியாக உணவக மேற்பார்வைகளையும் நிறுத்தியிருக்கின்றனர்.

இதனால் மேற்படி உணவகங்களில் மாணவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கு பாதிப்புமிக்க மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை உணவகங்களில் விற்பனைக்கு தடைசெய்யப்பட்ட மாப்பொருள் சார்ந்த உணவுகள், செயற்கை இனிப்புப் பதார்த்தங்கள் உட்பட வெளிநாட்டு உணவுப் பொருட்கள் பலவும் நாளாந்தம் மாணவர்களுக்கு விற்கப்பட்டு வந்துள்ளன.

“தரம் 1 முதல் தரம் 13 வரை படிக்கும் வயது 5 முதல் 18 வயது வரையான மாணவர்கள் மத்தியில் இரத்தினபுரி மாவட்ட பாடசாலை உணவகங்கள் அறிமுகம் செய்த தவறான உணவுப் பொறிமுறையால் தரமற்ற உணவுப் பொருட்களை உட்கொண்ட மாணவர்கள் மத்தியில் உணவு நஞ்சாக மாறியதால் வாந்திபேதி,வயிற்றோட்டம் மற்றும் பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகி 165 மாணவர்கள் அளவில் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சைகளை பெற்றுச் சென்றுள்ளனர்”, என சபரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் கபில கண்ணங்கர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான எமது புலனாய்வுத் தேடல்களை ஆரம்பித்த போது பல பயங்கரமான செய்திகளும், பாடசாலை உணவகங்களை தொடர்புபடுத்தி நிர்வாக மட்டத்தில் இடம்பெற்று வரும் நிதி மோசடிகள் பற்றிய செய்திகளும் தொடராகக் கிடைக்கப் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இரத்தினபுரி மாவட்ட பாடசாலையொன்றில் கல்வி அமைச்சின் உணவக மனுக்கோரல் பொறிமுறைகள் எதுவுமின்றி பாடசாலை அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்துடன் கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக பாடசாலை உணவகத்தை சட்ட விரோதமான முறையில் நடத்தி வரும் லலிதா நிர்மலன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு தினமும் இலவசமாக தேநீர் மற்றும் சில உணவுகளையும் வழங்கி வருகிறார் என அப்பாடசாலையின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

“ஏன் தினமும் அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் இலவசமாக தேநீர் வழங்கி வருகிறீர்கள்?”, என லலிதாவிடம் கேட்ட போது அவர் இவ்வாறு பதில் தருகிறார்.

“சுமார் 5 வருடங்களுக்கும் மேலாக நான் இந்த உணவகத்தை நடத்தி வருகிறேன்.எனக்கு தினமும் நல்ல வருமானம் கிடைக்கிறது.இதன் மூலம் நான் பல பயன்களை பெற்று வருகிறேன். எந்தக் கட்டணமும் இன்றி கடந்த மூன்று வருடங்கள் இவவுணவகத்தை நடத்தி வந்தேன். இதற்கான பூரண வசதியை பாடசாலை அதிபர் செய்து தந்துள்ளார். வெளியில் இப்படியானதொரு வியாபார முயற்சியை முன்னெடுப்பதானால் அதற்காக நாம் பல லட்சங்கள் முதலீடு செய்ய வேண்டும்.இவை அனைத்தையும் கருத்திட்கொண்டே தினமும் பாடசாலை ஆசிரியர்களுக்கு தேநீர் வழங்க இணங்கினேன்”,என அவர் தெரிவிக்கிறார்.

அத்துடன் மேற்படி பாடசாலையின் பிரதி அதிபரிடம் கடந்த 2023 ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் உணவக தினசரிக் கட்டணம் என்ற அடிப்படையில் தினமும் ஐநூறு ரூபா வழங்கி வருகிறேன்.இது தொடர்பில் எனக்கு எந்தவொரு பற்றுச்சீட்டும் கொடுக்கப்படவில்லை”, எனவும் லலிதா மேலும் தெரிவிக்கிறார்.

இது தொடர்பில் நாம் பிரதி அதிபரை தொடர்புகொண்டு கேட்ட போது “தான் அவ்வாறான எந்தவொரு நிதிக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடவில்லை.அத்துடன் எமது பாடசாலை உணவகம் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக போஷாக்கு மிக்க எந்தவொரு உணவும் அங்கில்லை.அதிகூடிய விலைக்கே அனைத்துப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. ஒருசிலரின் தனிப்பட்ட தேவைக்காகவே இந்த உணவகம் நடத்தப் படுகிறது”, என லலிதாவின் கருத்தை முற்றாக மறுக்கிறார் அவர்.

உணவகக் கட்டணமாக தினமும் பாடசாலைக்கு ஐநூறு ரூபா வழங்கியமை தொடர்பாக லலிதா நிர்மலன் முன்வைத்துள்ள பிரதி அதிபருக்கெதிரான முறைப்பாட்டிற்கும் அது தொடர்பில் பிரதி அதிபர் தெரிவித்துள்ள மேற்படி பதிலுக்குமிடையில் பாரிய முரண்பாடுகள் உள்ளன.பிரதி அதிபர் தான் லலிதாவிடம் எந்தவொரு கொடுப்பனவையும் பெறவில்லை என மறுத்துரைக்கின்ற போதிலும் இந்த விடயம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் ஆகியோர் தொடர்ந்தும் மௌனமாக இருப்பது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாம் இது தொடர்பில் ஆராயும் நோக்குடன் குறித்த பாடசாலை உணவகத்திற்கு சென்ற போது, கல்வி அமைச்சின் உணவக சுற்றறிக்கையின் எந்தவொரு அறிவுறுத்தலும் அங்கு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உணவகத்தில் வைக்கப்பட்டிருந்த பெரும்பாலான உணவுகள் மாப்பொருள் மற்றும் அதிகூடிய இனிப்பு சார்ந்தவைகளாகவே காணப்பட்டன. அடிப்படை சுகாதார நடைமுறைகள் எதுவும் பின்பற்றபடாத மேற்படி உணவகம் தொடர்பில் அப்பாடசாலையின் அதிபர் கருத்து தெரிவிக்கையில்

“கொரோனாவின் பின்னர் உணவகம் தொடர்பில் கேள்வி மனுக்கோரலை இன்னும் மேற்கொள்ள முடியவில்லை.எந்தவொரு பெற்றோரும் உணவகத்தை நடத்த முன்வருவதும் இல்லை.இதன்காரணாமாகவே பல வருடங்களாக லலிதா நிர்மலன் இவ்வுணவகத்தை நடாத்தி வருகிறார். உணவகத்திற்கான அடிப்படை வசதிகளை அவருக்கு செய்துகொடுக்க முடியாததனாலேயே இதுவரை அவரிடமிருந்து எந்தவொரு கட்டணத்தையும் அறவிடவில்லை.எனினும் அவர் தினமும் எங்களுக்கு தந்துதவும் இலவச தேநீர் எமது கட்டளை அல்ல.மாறாக அவர் விரும்பி உதவும் செயலாகும்.

கடந்த காலங்களில் எமது பாடசாலையின் சுகாதாரக் குழு மற்றும் உணவக கண்காணிப்புக் குழு ஆகியன முறையாக இயங்கத் தவறின.இதுவும் எமது உணவகத்தின் தரம் குறைவடைய மற்றுமொரு காரணமாகும்”, என அவர் தெரிவிக்கிறார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் “எமது உணவகம் தொடர்பில் எழுந்துள்ள முக்கிய பிரச்சினைகள் சிலவற்றை கருத்திட்கொண்டு தற்காலிமாக புதிய உணவகப் பொறுப்பாளரை தெரிவு செய்வதற்காக கேள்வி மனுக் கோரலை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம்திகதி அளவில் மேற்கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவுடன் கதைக்கவுள்ளேன். அத்துடன் புதிய உணவகப் பொறுப்பாளரை தெரிவுசெய்யும் வரை தற்போதைய உணவகத்தை மூடிவிடவும் தீர்மானித்துள்ளேன். பாடசாலை உணவக கண்காணிக் குழுத் தலைவர் பிரதி அதிபர் சுகயீன விடுமுறையில் இருப்பதால் உடனடியாக சில தீர்மானங்களை மேற்கொள்ளவும் முடியாமல் உள்ளன”,எனவும் அவர் தெரிவிக்கிறார்.

கல்வி அமைச்சின் உணவக வழிகாட்டல்களை முற்றாக மீறி செயற்பட்டுக்கொண்டிருக்கும் மேற்படி பாடசாலையின் செயற்பாடுகள் குறித்து ஏன் உரிய நடவடிக்கைகளை எடுக்க நீங்கள் தவறியிருக்கிறீர்கள்? கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகாந்தியிடம் கேட்ட போது,

”உணவக சுற்றறிக்கையை பல பாடசாலை நிர்வாகங்கள் மீறிச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.பாடசாலை அபிவிருத்திக் குழுவே இந்தத் தவறுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.பற்றுச்சீட்டின்றி பணப் பரிமாற்றம் இடம்பெறுவதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.இந்த விடயம் தொடர்பில் நாம் உரிய கவனம் செலுத்தி சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கு எதிராகவும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்க இருக்கின்றேன்”, என அவர் பதில் அளிக்கிறார்.

மேற்படி பாடசாலையில் மாத்திரமின்றி இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 583 பாடசாலைகளில் 179 பாடசாலைகளில் மாத்திரம்தான் பாடசாலை உணவகம் நடத்தப்பட்டு வருவதாகக் 2020 ஆம் வெளியிடப்பட்ட முக்கிய மருத்துவ ஆய்வறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அவற்றில் 56 பாடசாலைகளில் மாத்திரமே பாடசாலை நிர்வாகம் உணவகப் பொறுப்பாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது எனவும் அவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

மேற்படி ஆய்வுக் கண்டுபிடிப்பை உண்மைப்படுத்தும் விதமாகவே இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலை உணவகங்கள் அமைந்துள்ளன.

குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள முக்கிய தமிழ் மொழி மூலப் பாடசாலையொன்றின் உணவகமும் இன்னும் அதன் ஆரம்ப நிலையிலேயே உள்ளதாக அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எம்.இஸ்திகார் தெரிவிக்கிறார்.

நாம் இது தொடர்பாக அப்பாடசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளரை தொடர்புகொண்டு கேட்ட போது,

“எமது பாடசாலை உணவகம் கடந்த பல வருடங்களாக கேள்வி மனுக்கோரல்கள் எதுவுமின்றியே தொடர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளது.இதனால் உணவகப் பொறுப்பாளர்களுடன் ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவில்லை.எம்.காதர் என்பவரே தொடர்ச்சியாக பல வருடங்கள் எமது உணவகத்தை நடத்தி வந்துள்ளார்.அவர் தொடர்பில் பல சிக்கல்கள் இருந்த போதிலும் அதிபர் அவரிடமே ஒப்படைத்து வந்தார்.எனினும் பின்னர் எமது அழுத்தங்களைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கிணங்க புதிய ஒருவரிடம் உணவகத்தை ஒப்படைக்க முடிந்துள்ளது”, என அவர் தெரிவிக்கிறார்.

எனினும் மேற்படி பாடசாலை உணவகமும் ஏனைய பாடசாலை உணவகங்களைப் போன்று போதிய வசதிகள் எதுமற்ற மாப்பொருள் உணவுகளையே அதிகமாக விற்பனை செய்யும் உணவகமாகவே உள்ளது.அத்துடன் இதன் புதிய பொறுப்பாளர் கேள்வி மனுக்கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவரை விடவும் கூடுதலான நாளந்த உணவுக் கட்டணத்தை வழங்க முன்வந்திருந்த மூவரின் விண்ணப்பங்கள் அதிபரின் தீர்மானத்திற்கிணங்க நிராகரிக்கப்பட்டன என அப்பாடசாலையின் தகவல் தொடர்பு அதிகாரி பிரதி அதிபர் தெரிவிக்கிறார்.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி பாடசாலை அதிபரை தொடர்புகொண்டு கேட்டபோது

“கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்கவே எமது உணவக புதிய பொறுப்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய பொறுப்பாளரை விடவும் கூடுதலான தினக் கட்டணத்தை குறிப்பிட்டு பலர் விண்ணப்பித்திருந்தனர்.எனினும் அவர்கள் சமர்பித்திருந்த உணவுப் பண்டங்களின் விலைப் பட்டியல் மற்றும் அவர்கள் சமூகத் தொடர்பாடல்கள் எமது பாடசாலை கலாச்சாரத்திற்கு பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை.இந்நப் பின்னணியுடன்தான் அவர்களின் விண்ப்பங்கள் நிராகரிக்கப்பட்டன”, என அவர் தெரிவிக்கிறார்.

மேற்படி இரத்தினபுரி பாடசாலையில் இரவு நேர பாதுகாவலராகவும், கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக அப்பாடசாலையின் உணவக பொறுப்பாளராகவும் செயற்பட்டு வந்த காதரிடம் நீங்கள் ஏன் பாடசாலைக்குரிய உணவக கட்டணத்தை வழங்காமல் சட்ட விரோதமாக செயற்பட்டுள்ளீர்கள் எனக் கேட்ட போது அவர் இவ்வாறு பதில் தருகிறார்.

“நான் இப்பாடசாலையின் பாதுகாவலராகவே இணைந்தேன்.இப்பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக பல அச்சுறுத்தல்கள் வந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் நான் அவற்றை சமாளித்து பாடசாலையை பாதுகாத்துள்ளேன். என்மீது அதிபர் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.இந்தப் பின்னணியுடன்தான் பகல் நேரங்களில் பாடசாலை உணவகத்தை நடத்திச் செல்ல அவர் எனக்கு அனுமதி அளித்தார்.ஆரம்ப காலங்களில் கட்டணம் இன்றி உணவகத்தை நான் நடத்தி வந்த போதிலும் பின்னர் ஐநூறு ரூபா என்ற அடிப்படையில் கட்டணம் செலுத்தி வந்தேன்”,என அவர் தெரிவிக்கிறார்.

மேற்படி இரத்தினபுரி பாடசாலையில் மாத்திரமின்றி இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பல கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பாடசாலை உணவகம் வெறும் பெயளவில் மாத்திரம்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கேள்வி மனுக்கோரல்கள் எதுவுமின்றி அதிபரின் சொந்த விருப்பத்திற்கிணங்க நடத்தப்படும் இவ்வுணங்கள் பற்றி இரத்தினபுரி மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.மன்சூர் தனது கருத்தை இவ்வாறு முன்வைக்கிறார்.

“மாணவர்களுக்கு ஊட்டச் சத்துமிக்க ஆரோக்கியமான உணவுப் பண்டங்களை மாத்திரம் மாணவர்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய பாடசாலை உணவகங்கள் வெறும் இலாபத்தை மாத்திரம் கருத்திட்கொண்டு செயற்பட்டு வருவததால் மாணவர்கள் சிறுவயதிலேயே நிரந்தர நோயாளர்களாக மாற்றப்படுகின்றனர்.பாடசாலை அபிவிருத்திக் குழுவின் நேரடி கண்காணிப்புடன் செயற்படுத்தப்பட வேண்டிய இவ்வுணவகங்களை பொறுப்பேற்று நடத்துவோர் மத்தியில் எந்த சுகாதார பழக்க வழக்கங்களும் இல்லை. பாடசாலை அதிபர்கள் உணவகங்கள் ஊடாக வருமானம் திரட்ட முயற்சிக்கின்றார்களே அன்றி இதனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கத் தவறுகின்றனர்”,என அவர் குற்றம் சுமத்துகிறார்.

மேற்படி பொதுச் சுகாதார பரிசோதகரின் கருத்தை உண்மைப் படுத்தும் வகையிலே உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் அப்துல் றஹீம் சித்தீக் மற்றும் யனிஸெப் நிறுவனம் உட்பட அரச சார்பற்ற பல தொண்டர் நிறுவனங்களும் பாடசாலை உணவகங்களின் தற்போதைய பின்தங்கிய நிலைமை தொடர்பில் பாரிய அச்சத்தை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை பாடசாலை மாணவர்கள் மத்தியில் 10 சதவீத நிரந்த நோயாளர்களை உருவாக்கும் பாடசாலை உணவுப் பொறிமுறையை சீராக்கம் செய்ய அரசு முன்வர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நுவரெலிய மாவட்டத்திலுள்ள நூனுஓயா பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 26 மாணவர்களும்,கிளிநொச்சி பாடசாலையொன்றின் 12 மாணவர்களும் மற்றும் சில தென்னிலங்கை பாடசாலைகளைச் சேர்ந்த 8 மாணவர்களும் பாடசாலையில் பரிமாறப்பட்ட உணவு நஞ்சாகியதால் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என தேசிய ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

இரத்தினபுரி மாவட்ட பாடசாலை உணவகங்களில் தொடரும் மேற்படி உள்ளக முரண்பாடுகள் தொடர்பாக சபரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் பாடசாலை உணவக செயற்திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.ஜே.யு.பி. கொடிகார கருத்து தெரிவிக்கையில்,

“கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக பாடசாலை உணவகங்களை நடத்திவரும் அதிபர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.இவர்களுள் கேள்வி மனுக்கோரல் இன்றியும்,உணவகப் பொறுப்பாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமலும்,உணவக கட்டணங்களில் மோசடிகளில் ஈடுபட்டோர் தொடர்பான சில முறைப்பாடுகளும் உள்ளன.இது தொடர்பாக ஆராய்வதற்கு கணக்காய்வு பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.அவர் பல தரப்பினரிடமிருந்தும் உரிய வாக்கு மூலங்களை பதிவு செய்து வருகின்றனர்.விரைவில் அவர்களது இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றதும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்”, என அவர் தெரிவிக்கிறார்.




# பிரபாவுக்கு கச்சை கட்டிய மேஜர்:

## பிரபாவைக் காட்டிக் கொடுத்த அந்த மூன்று உடல்கள்

பிரபாவேதான்...

நெற்றியில் வெடில்

உண்மையில் இதற்குள் பிரபா இருப்பது இவர்களுக்குத் தெரியாது.

இவர்கள் இந்த ஒப்பரேஷனை மேற்கொண்டது.காலையில் கிடைத்த அந்த மூன்று உடல்களை–அவர்களிடம் இருந்த ஆயுதங்களை அடிப்படையாக வைத்துத்தான்.

அவை VIP களுக்கு பாதுகாப்பு வழங்கும் விசேட ஆயுதங்கள்.

அதனால் யாரோ பெரியவர் இதற்குள் இருக்கக்கூடும் என்று நினைத்துத்தான் தேடுதல் நடத்தினர்.

பிரபாகரன் இதற்குள் இருப்பார் என்று அவர்கள் நம்பவில்லை.

பிரபாகரன் இறுதியாக இருந்தது வாவிக்கு மத்தியில் மிகச் சிறிய நிலப்பரப்பில்.

100 மீற்றர் நீளம்.40 மீற்றர் அகலம்.

அந்த நிலத்துக்கு பின்னால் ஆழமான வாவி.

40 அடி ஆழம்.

அதைத் தாண்டி வந்துதான் அந்த நிலத்தில் இருந்துள்ளார்.

அங்கிருந்து தப்புவதுதான் திட்டம்.

ஆனால், முடியவில்லை.

பால் பக்கட்கள்தான் அவரின் உணவு.

வேறு உணவுகள் அங்கு காணப்படவில்லை.பால் பக்கட்களைத் தவிர...

ரேடியோ செட்,சிட்டிலிங் போன்,சட்டலைட் போன் கூட அங்கு.

அவற்றுக்கு பேட்டரிகள் டோர்ச் லைட் பட்டரிகள்தான்.

இன்னும் 27 உடல்கள் அங்கே. பிரபாகரனுடன் சேர்த்து காலையில் கொல்லப்பட்ட மூவருடன் சேர்ந்து 30 பேர் பிரபாவுடன்.

அவர்கள் பிரபாவை பாதுகாத்துக்கொண்டு நின்றவர்கள்.

தோற்றமே சொல்கிறது.அவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள் என்று.

யாருமே தற்கொலை அங்கிகள் அணிந்திருக்கவில்லை.

பிரபாகரனிடமிருந்து சில பொருட்கள் சிக்குகின்றன.

அவரது அடையாள அட்டை.முதலாம் இலக்கத் தகடு.001

பிஸ்டல்.பிஸ்டல் பெல்ட்.வு 56 துப்பாக்கி.

துப்பாக்கிகளில் தோட்டாக்கள் இல்லை. முடியும்வரை சண்டை செய்திருக்கிறார்.

எல்லோரது துப்பாக்கிகளும் இப்படித்தான்....

பிரபாவின் சட்டைப் பையில் சைனைட் குப்பி.உடைந்த நிலையில்....

ஆயுத பட்டியல் ஒன்று.கால் சட்டை பக்கட் உள்ளே

நீலப் பேனாவால் எழுதியது.

எங்கே அதை அனுப்புவதற்கு வைத்திருந்தார் என்று தெரியாது.

பூட்ஸ் அணிந்திருக்கவில்லை.

கால்கள் இரண்டும் வெளிறிவிட்டன.

இரண்டு,மூன்று நாட்கள் நீரில் நின்றிருக்க வேண்டும்.

அறிவிக்கிறார் அமில் இந்த செய்தியை தளபதிகளுக்கு.அங்கிருந்து...

எல்லோருக்கும் அதிர்ச்சி...மகிழ்ச்சி.

பரவுகிறது தகவல்.நந்திக்கடல் பூராகவும். அங்குள்ள படையினர் மத்தியில்...

எத்திவைக்கப்படுகிறது எல்லாத் தளபதிகளுக்கும்...

வந்து குவிகிறார்கள் தளபதிகள்.நந்திக்கடல் வாவி ஓரத்தில்...

இழுத்து வருகிறார்கள் பிரபாவின் உடலை. கரையை நோக்கி...

மேல்நோக்கி சுட்டுக்கொண்டு...

இழுத்து வருகிறார்கள்.சிறிது தூரம். காலைப் பிடித்து...

பின்னர் தூக்கி வருகிறார்கள்.உடல் சேதமடையக்கூடாது என்பதற்காக.

இல்லாவிட்டால் அடையாளம் காண்பது சிரமம்.

போடுகிறார்கள் தரையில்.

ஒரு கண் வெளியே.வெடில் பட்டு

அது அவரை அடையாளம் காண்பதில் சிக்கலை ஏற்படுத்தும்.

இதனால் கண்ணை உள்ளுக்குள் தள்ளி.இழுத்துக் கட்டுகிறார்கள் நெற்றியை...

அருகில் நின்ற ஊடகவியலாளரின் கைக்குட்டையால்..

குவிகிறார்கள் படையினர்.பிரபாவைப் பார்ப்பதற்காக...

எல்லாத் தளபதிகளும் அங்கே...

தொலைபேசி அழைப்பை எடுக்கிறார் கமால் குணரத்ன சரத் பொன்சேகாவுக்கு...

எத்திவைக்கிறார் தகவலை...

““சேர்..பிரபா சரி...““

கேட்டதும் மகிழ்ச்சி பொன்சேகாவுக்கு...

அப்படியென்றால் போர் உண்மையில் முடிந்துவிட்டது.

பிரபா தப்பி இருந்தால் இன்னும் 6 மாதங்களாவது எடுத்திருக்கும் போர் முடிவதற்கு...

“உடலை அப்படியே வைத்திருங்கள் அவரை அடையாளம் காண வேண்டும். கருணாவையும் தயா மாஸ்டரையும் அனுப்புகிறேன்...“

னுயேு பரிசோதனை செய்ய வேண்டும். அதற்கு இரத்தம் எடுக்க வேண்டும்.பிரபாவின் உடலில் இருந்து...

குத்துகிறார் டாக்டர் ஊசியை.இரத்தம் இல்லை உடலில்...

வெட்டி எடுக்கிறார் சதைத் துண்டு ஒன்றை.

நெற்றியில் இருந்து...

பின்னர்...!!!

கொண்டு செல்கிறார்கள் அந்த உடலை. பிரபாவின் உடலை...ஓரிடத்திற்கு...

கழற்றுகிறார்கள் சீருடையை... கட்டுகிறார்கள் கச்சையை.

இதைச் செய்பவர் மேஜர் அனுருத்த ரத்நாயக்க...

ஏன் இப்படிச் செய்தார்கள்...???

பிரபாவின் உடல் அந்தளவு முக்கியமில்லை அவர் 30 வருடங்களாக நாட்டை அழித்த பயங்கரவாதி என்று காட்டுவதற்காக...

கொண்டு போய் போடுகிறார்கள் உடலை அதே இடத்தில்...

பிற்பகல்...

வருகிறார்கள் இருவரும்.கருணாவும் தயா மாஸ்டரும்...

ஹெலியில்...

இருவரையும் பாதுகாக்கும் பொறுப்பு சவேந்திர சில்வாவிடம்...

கமாண்டோ வீரர்களை நிறுத்தி...

அவர்களுக்கு படையினர் ஏதும் செய்யலாம் என்ற அச்சம் பொன்சேகாவுக்கு..

அதனால்தான் இந்த ஏற்பாடு.

பார்க்கிறார்கள் பிரபாவின் உடலை...

அவர்கள் இருவரையும் அவதானிக்கிறார் சவேந்திர சில்வா.

அவர்களின் முக பாவனையை அறிவதற்காக...

சோகத்தில் சுருங்குகிறது தயா மாஸ்டரின் முகம்.பிரபாவின் உடலைக் கண்டதும்...

அது போதும் கென்போர்ம்.

அவர் பிரபாகரனேதான்...

உறுதிப்படுத்துகிறார்கள் இருவரும். கருணாவும் தயாவும்..

“இறந்து கிடப்பது பிரபாகரன்தான்.100 வீதம் உண்மை.“

அடித்துக் கூறுகிறார் கருணா.

அடுத்து...???

சங்கமமாகிறது உடல்.தீயுடன்...

ஆம்...

சாம்பலாகிறது பிரபாவின் உடல்.

அவர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார். மஹிந்த அறைந்தார் என்ற கதை எல்லாம் வதந்தி.

அவர் கொல்லப்படவில்லை என்பதற்கும்–இப்படித்தான் கொல்லப்பட்டார் என்பதற்கும்–இந்த சம்பவம் சாட்சி.

இருந்தும்...!!!

இவை எதுவும் தெரியாது கேப்டன் அலிக்கு...

யார் இந்த கேப்டன் அலி ..?

அவர்தான் பிரபாவை காப்பாற்ற வந்தவர். காப்பாற்றி வெளிநாட்டுக்கு அழைத்துப் போக வந்தவர்.

அது என்ன கதை....

பார்ப்போம் அடுத்த தொடரில்...



“சேர்..பிரபா சரி...“ கேட்டதும் மகிழ்ச்சி பொன்சேகாவுக்கு... அப்படியென்றால் போர் உண்மையில் முடிந்துவிட்டது. பிரபா தப்பி இருந்தால் இன்னும் 6 மாதங்களாவது எடுத்திருக்கும் போர் முடிவதற்கு... “உடலை அப்படியே வைத்திருங்கள் அவரை அடையாளம் காண வேண்டும்.கருணாவையும் தயா மாஸ்டரையும் அனுப்புகிறேன்...“

# 40 எம்பிக்களை வளைத்துப் போடுவாராம்



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றிபெறுவதற்காக மொட்டு கட்சியின் ஆதரவைத் திரட்டுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாடுபடுவதை நாம் அறிவோம்.

அந்த ஆதரவு கட்சி ரீதியாக கிடைக்காது என்று தெரிந்துவிட்டதால் அக்கட்சியில் உள்ள பலரை வளைத்துப் போடுவதற்கு ரணில் நடவடிக்கை எடுத்து வருவதையும் அறிவோம்.

மொட்டு கட்சியைச் சேர்ந்த எம்பி நிமால் லன்ஸா தலைமையில் ரணிலுக்கு ஆதரவு திரட்டும் கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அதில் முக்கியமாக மொட்டு எம்பிக்கள் 40 பேரை அந்தக் கூட்டமைப்பில் இணைப்பதற்கு உறுதிப்பூண்டுள்ளாராம் லன்சா.

# பசிலால் மஹிந்த அப்செட்







சில நாட்களுக்கு முன் ஜனாதிப திக்கும் பசில் ராஜபக்ச வுக்கும் இடையில் ஜனாதிபதி செயல கத்தில் ரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

மஹிந்த ராஜபக்சவுக்கும் சொல்லாமல்தான் பசில் அதில் கலந்துகொண்டிருக்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட மஹிந்த புள் அப்செட் ஆகிட்டாராம்.

இருந்தாலும்,அதுபற்றி எதுவுமே பசிலிடம் கேட்காமல் அந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்னவென்று சத்தமில்லாமல் தேடுகிறாராம் மஹிந்த.

இந்தச் சந்திப்பின் பின்தான் மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

ரணில் –பசில் சந்திப்பின்போது ,ரணிலின் சில செயற்பாடுகள் காரணமாக மொட்டு கட்சியினர் அதிருப்தியடைந்துள்ளனர் என்று பசில் ரணிலிடம் எடுத்துக் கூறினாராம்.

உண்மையில் ,பசிலுடனான அந்தச் சந்திப்புக்கு ரணிலுக்கு அவ்வளவு விருப்பம் இருக்கவில்லையாம்.

இதேவேளை,மஹிந்தவுடனான சந்திப்பை ரணில் விரும்பியே மேற்கொண்டாராம்.



# ஜனாதிபதியின் அறைக்குள் புகுந்த எதிர்க்கட்சி எம்பிக்கள்

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை நிவர்த்தி செய்யுமாறு கோரி ஜகத் குமார எம்பி ஒரு சில நாட்களுக்கு முன் ஜனாதிபதியிடம் கடிதம் ஒன்றை கையளித்தார்.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்று ஜனாதிபதியிடம் அதை ஒப்படைத்துவிட்டுத் திரும்பும்போது அவரது கண்களில் ஒரு காட்சி.

அது எதிர்க்கட்சி எம்பிக்கள் சிலர் ஜனாதிபதியின் அறைக்குள் நுழையும் காட்சி.

ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த 3 எம்பிக்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பிக்களும் அவர்களுள் இருந்தனர்.

எதற்காகச் செல்கிறார்கள் என்று யோசித்தவாறே செயலகத்தை விட்டு வெளியேறினார் ஜகத் குமார.

# மஹிந்த-ரணில் இரகசிய சந்திப்பு




கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது மொட்டு கட்சி எம்பிக்கள் சிலர் சபைக்குள் உரையாடிக்கொண்டு இருந்தனர்.

அப்போது ராஜபக்ச குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான எம்பி ஒருவர் அங்கு ஒரு தகவலைத் தெரிவித்தார்.அதுதான் மஹிந்த ராஜபக்சவும் ரணில் விக்கிரமசிங்கவும் ரகசியமாக சந்தித்து உரையாடிய தகவல்.

சன்கிரில்லா ஹோட்டலில் அந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்றும் யோஷித ராஜபக்ஸவே அந்த சந்திப்பை ஏற்பாடு செய்தார் என்றும் அவர் அங்கு கூறினார்.

அப்போது இன்னோர் எம்பி இது தனக்கும் தெரியும் என்றும் நாமல் இதற்கு எதிர்ப்பு என்றும் கூறினார்.



# கொதித்தெழுந்த சாமர சம்பத்

ஜனாதிபதியை சந்திப்பதற்காக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் அன்றைய தினம் ஜனாதிபதி செயலகத்துக்குள் சென்றார்.

அப்போது எதிர்க்கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியுடன் பேசிக்கொண்டிருக்கும் தகவல் கிடைத்தது அவருக்கு.

அவ்வளவுதான்.ஆத்திரமே வந்துவிட்டது அவருக்கு.

வாக்குகள் போட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்வது நாங்கள்.பிரயோசனம் அடைவது எதிர்த்து வாக்களித்த எதிர்க்கட்சி எம்பிக்களா? என்ன நியாயம் இது?


இவ்வாறு அங்கே கொதித்துக்கொண்டிருந்தார் சாமர அந்த எம்பிக்கள் வெளியே வரும்வரை.

# எதிர்க்கட்சியில் இருந்தே...


சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வலவுக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லா பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சி முயற்சி செய்து வருகிறது அல்லவா.

ஆனால், அரசோ அந்த பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக அதைக் கொண்டு வரும் எதிர்க்கட்சியில் இருந்தே பலரை வளைத்து போடும் வேலையை இப்போதே தொடங்கியுள்ளதாம்.

அதற்கான ரகசிய பேச்சுக்கள் தொடங்கிவிட்டனவாம்.அது இப்போதைக்கு வெற்றியளித்துள்ளது என்கிறது அரச தகவல்கள்.



# கேக் பெட்டியுடன் ரணில்



ஆளுங்கட்சி எம்பிக்களின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

அப்போது கேக் பெட்டியுடன் அங்கு சென்றார் ரணில்.

ஏன் தெரியுமா?

அன்றைய தினம் சஞ்சீவ எதிரிமான எம்பியின் பிறந்த தினம்.அந்த நாளை அங்கு கேக் வெட்டி கொண்டாடுவதற்காகவே அப்படி கேக் பெட்டியுடன் சென்றார் ரணில்.

யாரும் எதிர்பார்த்திராத தருணத்தில் இப்படிச் சென்று இன்ப அதிர்ச்சி கொடுத்தார் ஜனாதிபதி.




# Prime Landsக்கு தங்க விருது

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான, Prime Lands, 2020 ஆம் ஆண்டில் முதன் முறையாக கூட்டாண்மை பிரிவில் தங்க விருதை சுவீகரித்திருந்ததையடுத்து, இரண்டாவது தடவையாகவும், அதன் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.primelands.lkக்கு, 13ஆவது BestWeb.lk 2023 போட்டியில் தங்க விருதை சுவீகரித்துள்ளது.

ஆகஸ்ட் 9ஆம் திகதி Imperial Monarch இல் கோலாகலமாக நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வில் இந்த விருது Prime Lands க்கு வழங்கப்பட்டது. இதில் முன்னணி டிஜிட்டல் புத்தாக்க செயற்பாட்டாளர்கள் மற்றும் தூர நோக்க செயற்பாட்டாளர்கள் ஒன்றுகூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொருளடக்கத்தின் புத்தாக்கத்திறன், கிராபிக் வடிவமைப்பின் தரம், கலையம்சம், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் BestWeb.lk விருதுக்காக மீளாய்வு செய்யப்பட்டிருந்தது.

இந்த சாதனையினூடாக, Prime Land இன், டிஜிட்டல் மேம்படுத்தல் சிறப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, இணையத்தளத்தின் வடிவமைப்பு மற்றும் செயற்பாடு மற்றும் உறுதியான இணைய பிரசன்னம் ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்பத்தினூடாக வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்தும் குழுமத்தின் வர்த்தக நாம நோக்கத்தை மேம்படுத்தும் வகையில் இந்த கௌரவிப்பு அமைந்திருப்பதுடன், இணையத்தளத்தினூடாக ஒப்பற்ற சொத்து விளக்கம், live chat ஊடாக உடனுக்குடன் உதவி மற்றும் மெய்நிகர் பயணங்கள் போன்றன வழங்கப்படுகின்றன.




# வசீகரத் தன்மையினை உயர்த்தும் Prima KottuMee

முதன்மை நுகர்வோர் வர்த்தகநாமங்களில் ஒன்றான Prima KottuMee அதன் சமீபத்திய புதிய தயாரிப்பின் அறிமுகத்தின் மூலம் அதன் கவர்ந்திழுக்கும் தன்மையினை புதிய உயரத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

மிகவும் விரும்பப்படும் வர்த்தக நாமம் Prima KottuMee, வாழ்க்கைக்கு சுவாரஸ்யம் சேர்க்கும் வகையில், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல நுகர்வோரை மகிழ்வித்து, அதன் Hot & Spicy பயணத்தினை கொண்டாடி மகிழ்ந்தது. கொழும்பில் உள்ள சினமன் கிரான்ட் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த அறிமுக நிகழ்வில் நிறுவனத்தின் முகாமைத்துவம், உள்ளக குழு உறுப்பினர்கள், வர்த்தக நாம தூதர்கள், யொஹானி மற்றும் அஷான்யா மற்றும் தொடர்பாடல் பங்காளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

“Prima KottuMee இன் "Hot N’ Spicy” மரபை பற்றி சிந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். இந்தப் பயணமானது தனித்துவம்மிக்கது. அசல; ‘Hot N' Spicy’ சுவையினை விரும்பும் நுகர்வோரை பெரிதும் கவர்ந்துள்ளது.

நாம் தொடர்ந்தும் புதுமுறையிலான தயாரிப்புகளை வழங்குவதும் நுகர்வோருடன் எப்போதும் இணைந்திருப்பதுமே எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னதமான Prima KottuMee அனுபவத்தை வழங்கிட எப்போதும் துணைபுரின்றன என நாங்கள் நம்புகிறோம்“ என்று இலங்கையின் Prima குழுமத்தின் சிலோன் அக்றோ இன்டஸ்ட்ரீஸ்(பிரைவட்) லிமிட்டெட் இன் பொது முகாமையாளர் திரு.சஜித் குணரத்ன அவர்கள் தெரிவித்தார்.



# மக்கள் வங்கிக்கு Asia money விருது

இலங்கையில் “மிகச் சிறந்த உள்நாட்டு வங்கி“ மற்றும் “மிகச் சிறந்த பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கத்திற்கான வங்கி“ என மக்கள் வங்கி பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வங்கிச்சேவை மற்றும் நிதிச் சேவைகள் துறையில் முன்னோடியாகத் திகழும் மக்கள் வங்கி, புகழ்மிக்க Asiamoney விருதுகள் நிகழ்வில் மீண்டும் ஒரு தடவை மதிப்புமிக்க கௌரவ அங்கீகாரங்களைச் சம்பாதித்துள்ளது.

வங்கியானது “இலங்கையின் மிகச் சிறந்த உள்நாட்டு வங்கி“ (Best Domestic Bank in Sri Lanka) மற்றும் “மிகச் சிறந்த பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கத்திற்கான வங்கி“ (Best Bank for Diversity & Inclusion) ஆகிய விருதுகளுடன் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன், இது மேன்மை மீதான அதன் அர்ப்பணிப்பு, பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கிய வங்கிச்சேவைச் சூழலை ஊக்குவிப்பதில் அதன் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளுக்கான அர்ப்பணிப்பை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

Asia Money சஞ்சிகையால் வழங்கப்படும் Asia Money விருதுகள், வங்கிச்சேவை மற்றும் மூலதனச் சந்தை அரங்கில் உள்ள தனித்துவத்தின் அடையாளமாகும்.

அவர்களின் கடுமையான மற்றும் விரிவான ஆராய்ச்சி முறைக்கு பெயர் பெற்ற இந்த விருதுகள், பிராந்தியம் முழுவதும் உள்ள வங்கிகள் தங்கள் பிரதான வங்கிச்சேவை செயல்பாடுகளில் ஆற்றிய மிகச்சிறப்பான சாதனைகள் மற்றும் மேம்பாடுகளை அங்கீகரிக்கின்றன.

## 42ஆவது ஆண்டு விழாவினை 6000 மரக்கன்றுகளை

# நட்டு கொண்டாடும் Orient Finance




*இலங்கையில் முன்னணி வகிக்கும் நிதி நிறுவனமான Orient Finance தமது 42ஆவது ஆண்டு நிறைவினை கடந்த 2023 ஜூலை 26ஆம் திகதி பெருமையுடன் கொண்டாடியது.*

*இந்நாளை நினைவுகூறிடும் வகையில் பசுமைமிகு எதிர்காலத்திற்கு பங்களிப்பு செய்திடும் நோக்கத்துடன் மரக்கன்றுகளை நடும் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான தமது உறுதிப்பாட்டை மேலும் உறுதி செய்துள்ளது.*

*முதற்கட்ட நடவடிக்கையாக வனாதவில்லுவையிலிருந்து அனுராதபுரம், கிளிநொச்சி மற்றும் மன்னார் வரை பரந்து விரிந்துள்ள பழைமையான வில்பத்து வனப்பகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 6000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.*

*இம்முயற்சியானது மனிதர்களுக்கு மட்டுமன்றி வனவிலங்குகளுக்கும் பாரிய அளவில் நன்மை பயக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.*



# FACETS ஆபரணக் கண்காட்சி 2024 ஜனவரியில்

ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி தொடர்ச்சியாக 30ஆவது வருடமாக மீண்டும் இடம்பெறவுள்ளது.

2024 குயுஊநுவுளு ஞசை டுயமெய கண்காட்சியானது, இலங்கையின் அதிசயங்களை உலகுக்குக் காட்சிப்படுத்துவதன் மூலம், நாட்டின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கலாசாரத்தின் வரலாற்றை வெளிப்படுத்துகின்றது.

உலகின் மிகச்சிறந்த இரத்தினக் கற்களை கொண்டுள்ளதன் மூலம், இலங்கை ஒரு இரத்தினக் களஞ்சியமாக உலகம் முழுவதும் அறியப்படுகின்றது. மிகப்பெரிய இரத்தினக்கல் மையங்களில் ஒன்றாக கருதப்படும் இலங்கையின் தனித்துவமான மற்றும் அழகிய இரத்தினக்கற்கள் உலகெங்கிலும் கேள்வியாக உள்ளன.

இக்கண்காட்சியில் இலங்கை தனது அற்புதமான இரத்தினக்கற்களை காட்சிப்படுத்துவதற்கு மேலதிகமாக, உள்ளூர் கலாச்சார அம்சங்களுடன் உலகளாவிய போக்குகளை இணைக்கும் வகையிலான சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆபரண வடிவமைப்புகளையும் உற்பத்தி செய்து காண்பிக்கிறது.

இம்முறை குயுஊநுவுளு கண்காட்சியானது, இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் மூலவேர்களை எடுத்துக் காண்பிப்பதோடு, அரசர்கள் கால சகாப்தத்திற்குப் பயணித்து, பல ஆண்டுகளாக நாட்டின் இரத்தினங்கள் மற்றும் ஆபரணத் தொழில் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

இக் கண்காட்சியானது, வடிவமைப்பு மற்றும் கைவினைப்பொருளின் உணர்ச்சிகரமான அம்சத்தை மையமாகக் கொண்டு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் உலகத்தை காட்சிப்படுத்துவதோடு, அவை ஆண்டாண்டு காலமாக எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதையம் எடுத்துக் கூறுகின்றது.

# எயார்டெல் மீண்டும் அர்ப்பணிப்பு

பொருளாதார நெருக்கடி மத்தியில் இளைஞர்களிடையே மிகவும் விருப்பமான தொலைத்தொடர்பு நிறுவனமாக விளங்குகின்ற எயார்டெல் லங்கா, கடினமான காலகட்டங்களில் தனது வாடிக்கை யாளர்களுக்கு ஆதரவாக செயற்படும் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிபட தெரிவித்துள்ளது.

இலங்கையில் செயற்பாடுகளை ஆரம்பித்த காலத்திலிருந்து, எயார்டெல் ஒரே இலக்கை நோக்கியே பயணித்தது. பிற்கொடுப்பனவு பெக்கேஜ்களை வழங்கி, வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்கினோம்..

கடந்த ஓராண்டில் இலங்கையில் 1.1 மில்லியனுக்கும் அதிகமானோர் எயார்டெல் வழங்கிய ப்றீடம் பெக்கேஜ் இற்கு ஈர்க்கப்பட்டு அவர்கள் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பெக்கேஜ் இற்கு மாறியதன் ஊடாக, கடந்தாண்டில் எயார்டெல் நிறுவனம் இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் வலுவான வருமான வளர்ச்சியை பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'Freedom Mortgage' மீண்டும் அறிமுகம்



நகர வாழிட அனுபவங்களில் புரட்சிகரமான அம்சங்களை வழங்கும் ஜோன் கீல்ஸ் புரொப்பர்டிஸ், TRI-ZEN தொடர்மனைகளுக்காக 'Freedom Mortgage' வசதியை மீள அறிமுகம் செய்துள்ளது.

அதன் பிரகாரம், வாடிக்கையாளர் ஆரம்பத்தில் 20% கொடுப்பனவை மேற்கொண்டு, அடுத்த 6 மாதங்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள வேண்டியதில்லை. இதனூடாக, இல்லக் கொள்வனவாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிதிசார் நெகிழ்ச்சித்தன்மையை அனுபவிக்க முடியும்.

Freedom Mortgage என்பது சொத்துக்களின் உரிமையாண்மையுடன் தொடர்புடைய நிதிசார் சவால்களை இல்லாமல் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தொடர்மனையை கொள்வனவு செய்யும் கொள்வனவாளர்களுக்கு உடனடியாக அடைமான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் அழுத்தத்தை வழங்காமல், மகிழ்ச்சிகரமான அனுபவத்தை கொண்டிருக்கும் வசதியை வழங்குகின்றது.

வதிவிட ரியல் எஸ்டேட் பிரிவில் ஜோன் கீல்ஸ் புரொப்பர்டிஸ் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கான அடையாளமாக இந்த புத்தாக்கமான தீர்வு அமைந்துள்ளதுடன், பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்களுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

# அமானா வங்கி 14 ஆவது இடத்தில்...!



டுஆனு பிரான்ட் ஃபினான்ஸ் இலங்கையின் சிறந்த 100 பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் தரப்படுத்தல் வரிசையில் அமானா வங்கி 14 ஸ்தானங்கள் முன்னேறியிருந்தது.

ஒரு வருட காலப்பகுதியினுள் 81 ஆம் இடத்திலிருந்து 67ஆம் இடத்துக்கு முன்னேறியிருந்ததனூடாக, அமானா வங்கியின் அதிகரித்துச் செல்லும் கீர்த்தி நாமம் மற்றும் உறுதியான வர்த்தக நாம ஏற்றுக் கொள்ளல் போன்றன மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

சவால்கள் நிறைந்த ஆண்டில், மாற்றமடைந்த சந்தை நிலைகளுக்கமைய தமது செயற்பாடுகளையும் மாற்றியமைத்து மீண்டெழுந்திறனை வெற்றிகரமாக வெளிப்படுத்தியிருந்த அமானா வங்கி, நேர்த்தியான வர்த்தக நாம பெறுமதி வளர்ச்சியை பதிவு செய்திருந்த சில வர்த்தக நாமங்களில் ஒன்றாக திகழ்ந்து.

சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்தியிருந்ததிலும் கவனம் செலுத்தியிருந்தது. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகள் மற்றும் மாற்றமடைந்து வரும் சந்தை நிலைகளை பின்பற்றும் திறன் போன்றன அமானா வங்கியின் வர்த்தக நாம பெறுமதியை அதிகரிக்கச் செய்வதிலும், சந்தை நிலையிலும் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன.

டுஆனு பிரான்ட் ஃபினான்ஸ் "மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் தரப்படுத்தல்" என்பது சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற வர்த்தக நாம மதிப்பிடல் ஆலோசனை அமைப்பான பிரான்ட் ஃபினான்ஸ் உடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.



# ரிட்ஸ்பரி அனுசரணை

ரிட்ஸ்பரி, இலங்கையின் 13 தேசிய மெய்வல்லுநர்களுக்கு ரிட்ஸ்பரி "தாய்நாட்டுக்கு வீரர்" எனும் திட்டத்தின் கீழ் அனுசரணை வழங்கியிருந்தது.

இந்த அணி, 25ஆவது ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் பல்வேறு சாதனை மிகுந்த திறமைகளை வெளிப்படுத்தியிருந்தது. இந்தப் போட்டிகள் தாய்லாந்தின், பங்கொக் நகரில் 2023 ஜூலை 12 முதல் 16 வரை நடைபெற்றன.

இதில் 18 வயது நிரம்பிய தருஷி கருணாரட்ன, 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார். கயந்திகா அபேரட்ன வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

ஆண்கள் 4x400m அஞ்சல் ஓட்ட அணியில், அருண தர்ஷன, ரஜித ராஜகருண, பபாசர நிகு மற்றும் காலிங்க குமாரகே ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றிருந்தனர்.

பெண்கள் 4x400m அஞ்சல் ஓட்ட அணியில் நதீஷா ராமநாயக்க,சயுரி மெண்டிஸ், நிஷேந்திர பெர்னான்டோ மற்றும் தருஷி கருணாரட்ன ஆகியோர் உயர் பதக்க நிலையை பதிவு செய்திருந்தனர்.

குறிப்பாக, இலங்கை மூன்று தங்கப் பதக்கங்களை வென்றிருந்ததுடன், ஒரு வெள்ளி மற்றும் மூன்று வெண்கல விருதுகளையும் சுவீகரித்திருந்தது.

# ஹோமாகமவில் HNB இன் தங்கக் கடன் நிலையம்



HNB FINANCE PLC இன் புதிய தங்கக் கடன் மத்திய நிலையம், HNB FINANCEஇன் ஹோமாகமை கிளை வளாகத்தில், இல. 62/A ஹைலெவல் வீதி ஹோமாகமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் மற்றும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி மதுரங்க ஹீன்கெந்த ஆகியோர் கலந்துகொண்டதுடன் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் உட்பட பெருமளவிலான மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஹோமாகமை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளின் தங்கக் கடன் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்கு தீர்வாக, நிறுவனம் இந்த புதிய HNB FINANCE தங்கக் கடன் மத்திய நிலையத்தை அமைத்துள்ளது.

Gold Loan, Gold Plan மற்றும் VIP Gold Loan சேவைகள் வாடிக்கையாளர்களின் தேவைகளை துல்லியமாகக் கண்டறிந்து, நிதி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தங்கக் கடன் தீர்வுகள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறலாம்.

HNB FINANCE தங்கக் கடன் சேவையானது மூன்று நிமிடங்களில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ஒரு பவுன் தங்கத்திற்கான அதிகபட்ச முன்பணத் தொகையைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இந்த புதிய தங்கக் கடன் சேவை அலகு, தவணை முறையில் பணம் செலுத்தும் திறனுடன் நம்பகமான கொடுக்கல் வாங்கலை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வாக இருக்கும்.

வர்த்தக சுடர்

# விவசாயிகளுக்கு பயிற்சித் திட்டம்

PELWATTE

## LOCAL GOODNESS

Pelwatte Dairy, இலங்கையில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான விவசாய அறிவை உள்ளடக்கிய விவசாயிகளுக்கான பயிற்சி அமர்வுகளை வழங்கி அதில் முன்னோடி எனும் பெயரை பெற்றுள்ளது.

பெல்வத்தை டெய்ரி நிறுவனத்தின் பால் விவசாயிகளின் விநியோகச் சங்கிலியை இலக்காகக் கொண்டு இடம்பெற்ற இந்த செயலமர்வுகள், தொழில்துறையில் நவீன, உலகளாவிய சிறந்த நடைமுறைகளை வழங்கியதோடு, இது பால் விவசாயிகளின் பணி அறிவை மேலும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெல்வத்தை நிறுவனத்தின் தலைவர் ஆரியசீல விக்ரமநாயக்க இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "பெல்வத்தை தனது செயற்பாட்டின் மூலக்கல்லாக, அதன் பால் விவசாயிகளை கருதுகிறது. நாம் பெல்வத்தை டெய்ரி நிறுவனத்தை இன்று தொழில்துறையில் முன்னணிக்கு கொண்டு வந்துள்ளோம்.

அதற்காக எமது கடின உழைப்பாளிகளின் வலையமைப்பிற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். Pelwatte Dairy நிறுவனத்தின் உற்பத்திச் செயல்முறையின் ஒரு முக்கிய அம்சம் யாதெனில், உற்பத்தியின் பல்வேறு நிலைகளில், எமது விவசாயிகளின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரையிலான ஈடுபாடு ஆகும்.

எனவே, அவர்களின் திறன்களை வளர்ப்பது அவர்களின் நல்வாழ்வுக்கு மட்டுமல்லாது, இலங்கையின் பால் துறைக்கும் ஒரு அத்தியாவசியமான அம்சமாகும். இத்தொழில்துறைக்குள் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன சேர்ந்துள்ளன." என்றார்.



# உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்தும் Alumex PLC

1986ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Alumex PLC ஆனது, இலங்கையின் பன்னாட்டு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான Hayleys குழுமத்தின் துணை நிறுவனமாகும்.


இது இலங்கையில் அலுமினிய மூலப்பொருட்களை முழுமையாக ஒருங்கிணைத்த உற்பத்தியாளராகும். 35 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் நிபுணத்துவத்துடன், கதவுகள், ஜன்னல்கள், வர்த்தகநிலைய முகப்புகள், திரைச் சுவர்கள் மற்றும் தனது அனுமதிப்பத்திரத்தின் கீழ் உள்ள உலகளாவிய புகழ்பெற்ற அலுமினிய தனியுரிம கதவு, ஜன்னல், முகப்பு தொகுதிகள் உள்ளிட்ட ஏனைய விசேட வணிக பயன்பாடுகள் மற்றும் தொகுதிகளின் விரிவான தொகுப்பிற்கான அலுமினிய மூலப்பொருட்களை உருவாக்கி உற்பத்தி செய்து வருகிறது.

பரந்த அளவிலான கட்டடக்கலை, குடியிருப்பு மற்றும் தொழில்துறை Alumex தயாரிப்புகள், தேசிய மற்றும் சில்லறை விநியோக முறை மூலம், வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த சர்வதேச தரத்திற்கு இணையான தயாரிப்புகளை Alumex வழங்குகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு, தனது தயாரிப்புகளை Alumex ஏற்றுமதி செய்கிறது.

இலங்கையின் முன்னணி அலுமினிய உற்பத்தியாளரான Alumex PLC ஆனது, Lumin தயாரிப்புகளுக்கான மிகவும் திறமையான மற்றும் சான்றளிக்கப்பட்ட உற்பத்தியாளர்களை அங்கீகரிக்கும் பிரத்தியேக சமூகமான, Lumin Certified Fabricators Club திட்டத்தை வெற்றிகரமான நிறைவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது

Alumex நிறுவனம் 1986 ஆம் ஆண்டு முதல் உள்ளூர் உற்பத்தியாளர் சமூகத்தை ஆதரிப்பதிலான தனது அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன், அலுமினியம் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.



# ராஜா ஜுவலர்ஸின் வைர தினம்

இலங்கையின் தங்க உலகின் முடிசூடா மன்னனாக திகழும் ராஜா ஜுவலர்ஸ், மறக்க முடியாத வைர தின கொண்டாட்டத்தை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கண்கவர் நிகழ்வு வைர நகைகளின் காலத்தால் அழியாத கவர்ச்சியை மையமாகக் கொண்டதாக, நேர்த்தி மற்றும் புத்திசாலித்தனத்தின் சாராம்சத்தை வெளிப்படுத்தியது. "Diamond Forever" (எப்போதும வைரம்) எனும் கருப்பொருளுடன், இடம்பெற்ற இந்நிழ்வில் 50% வரை ஒப்பிட முடியாத தள்ளுபடிகள் வழங்கப்பட்டன.

இது அவர்களின் அன்பான வாடிக்கையாளர்களுக்கு நீடித்து நிலைக்கும் கவர்ச்சியான வைரங்களை கொள்வனவு செய்ய தூண்டியது.

ராஜா ஜுவலர்ஸின் அழகுக்கான அர்ப்பணிப்பானது நகைகளைத் தாண்டியும் பரந்து செல்கின்றது.

இங்கு ஒவ்வொரு கொள்வனவிற்கும், முதன்மையான அழகுசாதன வர்த்ததநாமங்களின் பெறுமதிமிக்க வவுச்சர்கள் வழங்கப்பட்டதோடு, இது அவர்களின் மதிப்புமிக்க கொள்வனவின் பாராட்டுக்கான அடையாளமாக இருந்தது

இங்கு அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கூடாரமானது புகைப்படங்களை மாத்திரமல்லாது, அன்பான நினைவுகளையும் ஏற்படுத்த உதவியது. அத்துடன் அவர்களது 0% வட்டி கொண்ட, மாதாந்த தவணைத் திட்டங்கள் இந்த நேர்த்தியான நகைகளை சொந்தமாக்குவதற்கான கனவுகளை அடைவதை உறுதி செய்தன.